“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

# தமிழ்மொழி ஆண்டு 11

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

# பகுதி - 1

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3**

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
   1. பழமொழி நானூறு
   2. முல்லைப்பாட்டு
   3. மதுரைக்காஞ்சி

2. அரை மாத்திரை ஒலியளவைக் கொண்டவை
   1. குற்றெழுத்துகள்
   2. நெட்டெழுத்துகள்
   3. மெய்யெழுத்துகள்

3. நாவலரை அறியாத மக்கள் அவரைப் போற்றமாட்டார்கள். இவ்வாக்கியம்
   1. உடன்பாட்டுவாக்கியம்
   2. எதிர்மறைவாக்கியம்
   3. மெய்ப்பாட்டுவாக்கியம்

4. குதிரை கனைக்கும் அதுபோல யானை
   1. கத்தும்
   2. பிளிறும்
   3. உறுமும்

5. தமிழ்மொழியில் இடம்பெற்றுள்ள கலைச்சொல்
   1. மண்
   2. கதிர்வீச்சு
   3. கமலம்

6. எல்லோருடனும் இன்சொல் பேசி அன்பை வளர்ப்போம். இன்சொல் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. மென்சொல்
   2. வன்சொல்
   3. செஞ்சொல்

7. புதுக்கவிதையின் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர்
   1. து.சேரன்
   2. ந.பிச்சமூர்த்தி
   3. மு.மேத்தா

8. கணினியில் ‘பாமினி’ எழுத்துருவை அறிமுகம் செய்தவர்
   1. முனைவர் கல்யாணசுந்தரம்
   2. திரு.சிறிநிவாசன்
   3. பேராசிரியர் கிருட்டிணமூர்த்தி

9. முதல் நிலை எழுத்துகள் கொண்ட தொகுதி
   1. அ, எ, ஒ, ஔ
   2. க், ச், ட், த
   3. ர, ற, ல, ள

10. அந்நியர் ஆட்சியின்போது இடிந்த கட்டடங்களை அரசன் திருத்துவித்தான். இவ்வாக்கியம்
    1. தன்வினை
    2. பிறவினை
    3. செயப்பாட்டுவினை

1 2 3

11. கார்பெய்யக் கழனிகள் பச்சைப்பசேலெனக் காட்சியளித்தன. இதில் வந்துள்ள ஆகுபெயர்
 1. காலவாகுபெயர்
 2. பொருளாகுபெயர்
 3. சினையாகுபெயர்

12. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன
 1. பகுபத உறுப்புகள்
 2. வாக்கிய உறுப்புகள்
 3 செய்யுள் உறுப்புகள்

13. ஈழத்தில் பண்டைத் தமிழிலக்கியங்களை ஏட்டிலிருந்து நூல்களாகப் பதிப்பிக்கும் நெறியை அறிமுகப்படுத்தியவர்
 1. ஆறுமுகநாவலர்
 2. சரவணமுத்துப்புலவர்
 3. சேனாதிராயமுதலியார்

14. விருந்தினரை வரவேற்கக் காத்திருப்பவன் தேவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான். இதில் வினையாலணையும் பெயர்
 1. விருந்தினன்
 2. ஆவான்
 3. காத்திருப்பவன்

15. தரணியெங்கும் தமிழர் புகழ் பரவவேண்டும். இதில் தரணி என்பதன் பொருள்
 1. பார்
 2. நாடு
 3. ஊர்

16. வெட்டவெட்டத் தழைப்பேன்; இறப்பினில் கண் விழிப்பேன்; மரங்களில் நான் ஏழை. என் பெயர்
 1. வாழை
 2. மா
 3. பலா

17. ‘காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து…’ இதில் வந்துள்ள அணி
 1. உருவகவணி
 2. உவமையணி
 3. தற்குறிப்பேற்றவணி

18. ‘ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு’ இதில் வந்துள்ள உரிச்சொல்
 1. ஓடு
 2. உறு
 3. மீன்

19. பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் சேய்மையில் இருப்பதைக் குறிக்கும் புறச்சுட்டு
 1. அந்தவீடு
 2. இந்தவீடு
 3. உந்தவீடு

20. கன்றைக் காணாத தாய்ப்பசு கதறியது. இதில் வந்துள்ள குற்றியலுகரச்சொல் அல்லாதது
 1. பசு
 2. கன்று
 3. கதறியது

**1 2 3**

21. சிறுமி கைநிறைய வளையல்கள் அணிந்திருந்தாள். இதில் வளையல்
    1. காரணப்பெயர்
    2. இடுகுறிப்பெயர்
    3. காரணஇடுகுறிப்பெயர்

22. நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைப் பாடியோர்
    1. சித்தர்கள்
    2. ஆழ்வார்கள்
    3. நாயன்மார்

23. 'உதவி செய்தவரை என்றும் மறத்தல் ஆகாது' என்பதை விளக்கும் பழமொழி
    1. பழகப்பழக பாலும் புளிக்கும்
    2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
    3. துணை போனாலும் பிணை போகாதே

24. மங்கையவள் கொல்லையடைந்து குளிர்புதுப் புனலை மொண்டாள். இதில் புனல் என்பதன் பொருள்
    1. நெருப்பு
    2. நீர்
    3. காற்று

25. கஞ்சிக்கொட்டில் முன் கால்கடுக்கக் காத்திருந்த சிறுவன் பசியால் துடிதுடித்தான். இதில் துடிதுடித்தல் என்பது
    1. இரட்டைமொழி
    2. இணைமொழி
    3. அடுக்குமொழி

25×1=25 புள்ளி

**2. சேர்த்தெழுதுக.**

1. தேன் + மொழி = ______________________

2. எள் + நெய் = ______________________

3. சொல் + ஓவியம் = ______________________

4. வெண்மை + நீறு = ______________________

5. புளி + பழம் = ______________________

6. ஆறு + வெள்ளம் = ______________________

6×½=3 புள்ளி

**3. பிரித்தெழுதுக.**

1. பைங்கிளி = ________ + ________
2. இருபது = ________ + ________
3. சொல்லுறுதி = ________ + ________
4. பூங்கா = ________ + ________
5. வடதிசை = ________ + ________
6. எழுத்ததிகாரம் = ________ + ________

6×½=3 புள்ளி

**4. கீழ்க்காணும் திருக்குறள்களை நிறைவுசெய்து அவற்றின் பொருளினையும் எழுதுக.**

1. செல்விருந்து ஓம்பி ________________

________________________

1 புள்ளி

பொருள்:

________________________

________________________

________________________

________________________

1 புள்ளி

2. அகனமர்ந்து செய்யாள் ________________

________________________

1 புள்ளி

பொருள்:

________________________

________________________

________________________

________________________

1 புள்ளி

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பைபிளைத் தமிழ்மொழியில் முதலில் மொழிபெயர்த்தவர் யார்? 1 புள்ளி

2. ஒரு நாட்டின் தொழில் வாய்ப்பைத் தீர்மானிப்பவை யாவை? 1 புள்ளி

3. பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் போன்ற பக்திசாரா இலக்கியங்கள் எக்காலத்தில் தோற்றம் பெற்றன? 1 புள்ளி

4. புதிய கலைச்சொற்களை ஆக்கும்போது கடைப்பிடிக்கவேண்டிய பண்புகளைத் தருக. 1 புள்ளி

5. எச்சவினை என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. 1 புள்ளி

6. இடைச்சொல் என்றால் என்ன? அதன் வகைகளுள் நான்கினை எடுத்துக்காட்டுடன் தருக. 2 புள்ளி

7. இலக்கியவகைச் சொற்களை எடுத்துக்காட்டுடன் தருக. 1 புள்ளி

8. வேற்றுமை என்றால் என்ன? ஏழாம் வேற்றுமை உருபுகளையும் அதன் பொருளையும் தருக. 2 புள்ளி

**6. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. வீசி வரும் தென்றலே... 4 புள்ளி
2. சின்னக் குழந்தையாய்…

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கஇவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந்து தன்ன
ஊண்ஒலி அரவம் தானும் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டைகொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவி றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்கண்டு
மற்றும் மற்றும் வினவுவதும்! தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே!

1. முட்டைகொண்டு வற்புலம் சேருவது எது? 1 புள்ளி

_______________________________________________

2. பண்ணன் போக்கிய பிணி யாது? 1 புள்ளி

_______________________________________________

3. உணவு உண்டு செல்பவர் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது? 1 புள்ளி

_______________________________________________

4. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. உவமையுருபு _______________________

ஆ. அளபெடை _______________________ 2 புள்ளி

5. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2 புள்ளி

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. உலகமயமாதல்
2. தமிழர்பண்பாடும் புலம்பெயர்வாழ்வும்
3. இளங்கன்று பயமறியாது

9 புள்ளி

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து அதனை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மனிதனுடைய செயற்பாடுகளைச் செந்நெறிப்படுத்த வேண்டிய தேவை இன்று இன்றியமையாதது. வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழியை அவனுக்கு உணர்த்த ஒரு ஆற்றுகை தேவைப்படுகிறது. சமூகத்தின் அங்கத்தவனாகிய மனிதனின் 'பண்புடைமை' என்பது பாடறிந்து ஒழுகலாகும். எனவே, அவனைப் பண்புடையவனாக ஆக்குவதற்கு எமது முன்னோர் பலவழிகளைக் கூறிச்சென்றுள்ளனர். விலங்குகளின் வாழ்வியல் மனிதனைப் பண்படுத்துவதற்கு உதவும் நிலையுமுண்டு. ஆதிகால மனிதன் காட்டிலே வாழ்வு நடத்தியவன். பல வனவிலங்குகளை வேட்டையாடி வயிற்றுப்பசியைத் தீர்த்தவன். ஆனால் இன்று நாகரிக முதிர்ச்சி பெற்று நகரவாசியாகிவிட்டான். அவன் மனம் வாழ்வுச்சூழலால் மாசு பெற்றுள்ளது. 'மனத்துக் கண் மாசிலனாக வாழ்வதே அறம்' என வள்ளுவர் வரையறை செய்து விளக்கினார். மனத்திலே மாசற்று வாழ மனிதனுக்கு மானம் தேவை. 'மானம்' என்பது எக்காலத்தும் தமது நிலையிலிருந்து திரியாமை ஆகும்.

4 புள்ளி

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பழைய தமிழ் நூல்களை முன்னோர் பனை ஓலைகளில் எழுதி வைத்தனர். அக்காலத்தில் இக்காலத்தைப் போன்ற எழுதுகருவிகள் இல்லை. முற்காலத்தில் புலவர்களிடம் நூல்கள் ஓலைச்சுவடிகளாக இருக்கும். வேண்டிய நூல்கள் எல்லாம் ஒரு புலவரிடம் கிடைப்பதருமை. சிலரிடம் சில நூல்கள்தான் இருக்கும். அவர்கள் அவற்றை எளிதில் பிறருக்குக் கொடார். ஏனெனில் நூலை எழுதுவதோ, எழுதிவித்தலோ மிகவும் கடினமான செயலாகும். புலவரின் சந்ததியார் கல்லாதவராயின் ஓலைச்சுவடிகள் பரண் மீதேறும். அங்கிருந்து எடுப்பார் இன்மையினால் மடிந்து போதலும், செல்லரித்தலும், இராம பாணத்தால் அழிவுறுதலும் உண்டு. மூவேந்தர்களும், வள்ளல்களும் இறந்த பின்பு, தமிழ்நாடு நிலைபெற்ற அரசாட்சி இன்மையால் சீர் குலைந்தது. தமிழ் வளர்ச்சி குன்றியது.

1. முன்னோர் நூல்களை எவற்றில் எழுதி வைத்தனர்?

______________________________________________

2. வேண்டிய நூல்கள் எல்லாம் ஒருபுலவரிடம் இல்லாது போனமைக்குக் காரணம் என்ன?

______________________________________________

3. யாரிடம் இருந்த ஓலைச்சுவடிகள் பரண்மீது வைக்கப்பட்டன?

______________________________________________

4. பரண்மீது வைக்கப்படும் ஓலைச் சுவடிகளுக்கு யாது நிகழும்?

______________________________________________

5. மூவேந்தரும் வள்ளல்களும் இறந்த பின் தமிழ்நாட்டின் நிலைமை என்ன?

______________________________________________

6. அரசினரின் ஆதரவு இல்லாத ஒருமொழிக்கு என்ன நிலைமை ஏற்படும்?

______________________________________________

7. ‘மூவேந்தர்’ எனக் குறிப்பிடப்படுபவர் யாவர்?

______________________________________________

7×1=7 புள்ளி

3. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக. 4 புள்ளி

**Deutsch: Sprachkompetenzen**

In Bezug auf den Aufbau sprachübergreifender Kompetenzen zeigen Forschungen, dass Kinder, die mit mehreren Sprachen aufwachsen, im Vergleich zu monolingual aufwachsenden Kindern bevorzugt scheinen: Sie entwickeln ein höheres Sprachbewusstsein und können ihre sprachlichen Fähigkeiten besser einschätzen, reflektieren und kontrollieren. Neuere Forschungen in den Neurowissenschaften zeigen auch, dass durch den frühkindlichen Erwerb von Sprachen mehr Anknüpfungspunkte für den späteren Erwerb anderer Sprachen vorhanden sind.

Studien zum mündlichen Einsatz der Zweisprachigkeit belegen, dass die meisten Personen aufgrund genauer Kriterien funktional und der Situation angepasst zwischen den Sprachen wechseln. Mündliche Sprachfähigkeiten lassen sich jedoch nur schwer auf andere Sprachen transferieren. Schriftliche Sprachkompetenzen sind schwieriger in der Aneignung: Sie verlangen, dass komplexe Zusammenhänge in der Standardsprache dargestellt und verstanden werden können. Dadurch ist es jedoch einfacher, die schriftlichen Fähigkeiten von einer Sprache in eine andere zu übertragen, was auch empirisch belegt werden kann.

**Français : Compétences linguistiques**

En ce qui concerne le développement des compétences linguistiques, certains travaux de recherche montrent que les enfants qui grandissent avec plusieurs langues semblent favorisés par rapport aux enfants qui grandissent dans un contexte monolingue : ils acquièrent une plus grande conscience linguistique et sont capables de mieux évaluer leurs capacités langagières, de se faire une réflexion sur leurs capacités et de les contrôler. Des études récentes relevant des neurosciences indiquent également que l’acquisition précoce des langues offre davantage de points de référence pour l’apprentissage ultérieur d’autres langues.

Des études sur l’utilisation orale du bilinguisme montrent que la plupart des personnes sont capables en pratique de passer d’une langue à l’autre, sur la base de critère assez précis, en s’adaptant à la situation. Pourtant, s’agissant des capacités langagières orales, ce n’est pas facile de jongler d’une langue à l’autre. Quant aux compétences langagières écrites, il est plus difficile de les acquérir : elles nécessitent que les relations entre l’une et l’autre soient illustrées et comprises dans la langue standard. Il est de ce fait néanmoins plus facile de jongler d’une langue à l’autre, ce qui peut d’ailleurs se démontrer de manière expérimentale.

**Italiano : Competenze linguistiche**

Per quanto riguarda lo sviluppo delle competenze plurilingue, alcune ricerche mostrano che i bambini che crescono parlando più lingue sembrano avvantaggiati rispetto a quelli che crescono in un contesto monolingue : acquisiscono una maggiore consapevolezza linguistica, essendo in grado di valutare, riflettere e controllare meglio le proprie abilità linguistiche. Recenti studi neuroscientifici indicano che apprendere lingue già da piccoli, precocemente, offre maggiori punti di riferimento per l’apprendimento di altre lingue successivamente.
Studi compiuti sull’uso verbale del bilinguismo indicano che la maggior parte delle persone può passare praticamente da una lingua all’altra in base a precisi criteri e situazioni specifiche. Tuttavia, le abilità linguistiche orali sono difficili da trasferire in altre lingue.. Le competenze linguistiche scritte sono più difficili da acquisire : esse richiedono infatti che le relazioni complesse della lingua standard possano essere rappresentate e comprese.
Tuttavia, questo rende più facile trasferire le competenze scritte da una lingua all’altra , ed esso può essere anche verificato praticamente.

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |